செலவழிக்க வேண்டி வரும். கட்டிட வேலையைப் பொறுத்த வரையில் நிதி உதவிக்கு எல்.ஐ.சி. யோடு ஆராய்ச்சி செய்யப் பட்டிருக்கிறது. அது இன்னும் முடிவு அடையவில்லை.

மயிலாடும்பாறையில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

* 222 வினா—**திரு. த. சோனையா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், மயிலாடும்பாறையில் உயர்நிலைப்பள்ளி கட்டுவதற்கு தனியார்க்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

மாவட்டங்களில் தமிழ் ஆட்சிமொழி

* 223 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழை ஆட்சி மொழியாக்குதல் எந்த அளவுக்கு செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆய்வதற்கு மாவட்ட மட்டத்தில் சிறப்பு ஆய்வுப் பணியாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், மாவட்ட வாரியாக எத்தனை சதவீதம் இம் முயற்சியில் வெற்றி ஏற்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 1974 ஜனவரி முதல் ஏப்ரல் வரையுள்ள புள்ளிவிவர கணக்குப்படி தஞ்சை, வடாற்காடு மாவட்டங்களில் முறையே 98 சதவிகிதம், 83 சதவிகிதமும், கோவை, நீலகிரி, இராமநாதபுரம் மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் 60-க்கும், 78-க்கும் இடைப்பட்ட சதவிகித அளவில் இம்முயற்சியில் வெற்றி ஏற்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர், வட்டாட்சித் தலைவர் ஆகிய

1975 மார்ச் 7]

எல்லாக் கட்டடங்களிலும் பொதுமக்களுக்குத் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப் படுமா? இம்மாதிரி தமிழில் சிறந்த முறையில் வரைவுகளை எழுதுகின்ற அதிகாரிகளுக்கு வேலை உயர்வு அளிப்பதில் முன் உரிமை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை நான்கு கட்டடங்களில் செயல்படுத்த முயற்சி எடுக்கப் பட்டிருக்கிறது. கீழ் மட்டத்திலும், மேல் மட்டத்திலும் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழில் நல்ல முறையில் வரைவு எழுதுகிறவர்களுக்கு இரண்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் அதிகாரிகளை வைத்து ஆய்வாளர்களும், இயக்குனர்களும் தனி வகுப்புகள் நடத்தி அவர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு வரைவு எழுதுவது எப்படி, செயற்குறிப்பு எழுதுவது எப்படி என்பதில் பயிற்சி கொடுத்து வருகிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, this Government has introduced Tamil as official language and it is quite natural they are implementing it. But in certain border areas like Hosur, there are minority languages dominating and unless the officers use such languages, those people will not be able to understand the Government Schemes, etc. Therefore, in such areas, may I know from the Hon. Minister whether the Government would permit the use of minority languages for official purposes?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்பு எங்களிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட மொழி சிறுபான்மை மக்களுடைய எண்ணத்தைக் கருத்தில் கொண்டு, அந்தந்த இடங்களில் தெரிவிக்கப்படுகின்ற விவரங்களை தமிழோடு சேர்த்து அவரவர்கள் மொழியில் அனுப்பவும் முயற்சி செய்யலாம்.

[1975 மார்ச் 7

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நீதி மன்றங்களில் சில வாக்குமூலங்கள்தான் தமிழில் எழுதப் படுகின்றன. தீர்ப்பு போன்றவைகளையும் தமிழிலேயே எழுது வதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கீழ் மட்டங்களில் இருக்கின்ற நீதிமன்றங்களில் வாக்குமூலங்கள், தீர்ப்பு ஆகியவை தமிழில் கொடுக்கப்படுகிறது. நாளடைவில்தான் மேல் மட்டத்தில் இருக்கிற மன்றங்களுக்குக் கொண்டு வந்தாக வேண்டும். அதற்கு உதவியாக இன்றைக்கு தமிழிலேயே சட்டங்களை மொழிபெயர்த்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சிறப்பு ஆய்வாளர்களின் பணிகள் என்ன ? அவர்கள் ஏதாவது அறிக்கை தந்திருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாவட்டங்களுக்கும் சென்று ஒரு நாள், ஒன்றரை நாள் தங்கி ஆய்வு செய்கிறார்கள். குறைபாடுகள் இருந்தால் சுட்டிக் காட்டுகிறார்கள். சிறந்த முறையில் எழுதப்பட்டு இருப் பதையும் பார்வையிட்டு அதைப் போல் மற்ற இடங்களிலும் பின் பற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக, தொழிலாளர்கள் லேபர் கமிஷனரிடத்திலே எழுதிக் கொடுக்கக் கூடிய கடிதங் களுக்குப் பதில்கள் ஆங்கிலத்திலே வந்து கொண்டிருக்கின்றன. தொழிலாளர்கள் நேரடியாகப் பாதிக்கப்படக் கூடியவைகளுக்குக் கூட ஆங்கிலத்திலே பதில்கள் வந்து கொண்டிருக்கின்றனவே. ஆகவே, அங்கே முழுமையும் தமிழிலே இருக்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே, தமிழிலே நடத்த வேண்டுமென்றுதான் எடுத்துச் சொல்லி வருகிறோம். குறிப்பாக, நிதித் துறையிலும், சட்டத் துறையிலும் இரண்டு துறையிலும் தான் முழுமையாகத் தமிழைக் கொண்டு வர முடியவில்லை. தொழிலாளர் துறையைப் பொறுத்தவரைக்கு மட்டுமல்லாமல், மற்றத் துறைகளுக்கும் தமிழிலே வருகின்ற கடிதங்களுக்குத் தமிழிலேதான் பதில் எழுத வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.